இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 336 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 32 – புதன்கிழமை 16 ஜூலை 2025 – மதுரை 16 + 4 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 336 : Thiruvalluvar Year - 2056 - Aani 32 - Wednesday 16 July 2025 - Madurai 16+4 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கிவைத்து, சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு, விவரங்களை கேட்டறிந்தார். இந்த நிகழ்வில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மு.பெ.சாமிநாதன், சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், து.ரவிக்குமார், டாக்டர். எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, சிந்தனைச்செல்வன், தி.வேல்முருகன், சபா. ராஜேந்திரன், கோ.அய்யப்பன், ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் / சிறப்பு அலுவலர் (மு.கூ.பொ), திருமதி.பெ.அமுதா, கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## கடைக்கோடி மக்களும் அரசின் சேவைகளை காலத்தே பெற்றிட

# 'உங்களுடன் ஸ்டாலின்' புரட்சிகரமான திட்டம்!

### சிதம்பரத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சிதம்பரம், ஜூலை 16 -**

**அரசுத் துறைகளின் சேவைகளை, மக்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார்.**

**"உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை தொடங்கி வைத்த ஒரு மணிநேரத்திற்குள்ளாகவே மாற்றுத்திறனாளி ஒருவருக்கு காதொலி கருவியையும், பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் மருத்துவக் காப்பீட்டு அட்டையும், மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆணையினையும் அவர் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர், சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

**முதல்கட்டமாக 3563 முகாம்கள்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்களின் குறைகளை வீட்டிற்கே சென்று கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், ஜூலை 15ஆம் தேதி முதல் நவம்பர் 2025 வரை மாநிலம் முழுவதும் 10,000 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார். இத்திட்டத்தில், அனைத்து மாவட்டங்களிலும் முதற்கட்டமாக, இன்று முதல் 15.08.2025 வரை 3563 முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இதில் 1428 முகாம்கள் நகர்ப்புறங்களிலும், 2135 முகாம்கள் ஊரகப் பகுதியிலும் நடைபெறும்.

இந்த முகாம்கள் நடைபெறும் பகுதிகளில், இத்திட்டம் குறித்த விழிப்புணர்வுப் பணிகள், விண்ணப்பம் மற்றும் அரசு வழங்கும் சேவைகளைப் பெறத் தேவையான தகுதிகள்/ஆவணங்கள், ஆகிய விவரங்கள் அடங்கிய தகவல் கையேட்டினை வழங்கும் பணியினை தன்னார்வலர்கள், அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொண்டு வருகின்றனர். மேலும், முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்த விவரங்களுடன், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியுள்ள, விடுபட்ட பெண்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம் என்ற விவரமும் தன்னார்வலரால் தெரிவிக்கப்படுகிறது. முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகிறது.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும்,

தொடர்ச்சி 4ஆம் பக்கம்





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டு, விவரங்களை கேட்டறிந்தார்.

## வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்திற்கு அடித்தளம் அமைத்தவர் ஐயா இளையபெருமாள்!

# டெல்லி அணியின் காவித் திட்டம் தமிழ்நாட்டில் பலிக்காது!

### ஐயா இளையபெருமாள் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சிதம்பரம், ஜூலை 16-**

**"வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்திற்கு அடித்தளம் அமைத்தவர் ஐயா இளைய பெருமாள்" என்றும் "டெல்லி அணியின் காவித் திட்டம் தமிழ்நாட்டில் பலிக்காது" என்றும் சிதம்பரம் புறவழிச்சாலை, லால்புரத்தில் ஐயா இளையபெருமாள் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உறுதிப்பட தெரிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், லால்புரத்தில்,

ஐயா எல்.இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை திறந்துவைத்து ஆற்றிய உரை வருமாறு:-

ஐயா எல்.இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டு அரங்கத்தின் திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது. நம்முடைய அருமை பெரியவர் ஐயா இளையபெருமாள் அவர்களின் நினைவரங்கத்தை திறந்து வைத்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய பிறந்தநாளில் பொதுமக்களின் குறைகளை விரைந்து தீர்க்க மாபெரும் முன்னெடுப்பாக 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற சிறப்பு முகாமைத் தொடங்கி வைத்துவிட்டு, இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன்!

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) ஐயா இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் நிறுவப்பட்டுள்ள ஐயா எல்.இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.